# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண் 100, அண்ணாசாலை, கிண்டி, சென்னை 600 032
தொலைபேசி 044-22201337
மின்னஞ்சல் முகவரி ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in

முன்னிலை: திரு மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

ஆணை எண் 29/மா/2024
நாள் 07.10.2025

திரு. கா. முகமது இப்ராஹிம்ஷா
புதுக்கோட்டை — முறையீட்டு மனுதாரர்

(1) ஆணையர்
புதுக்கோட்டை மாநகராட்சி
(2) திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக்
புதுக்கோட்டை — எதிர்மனுதாரர்கள்

புதுக்கோட்டை, நிஜாம் காலனி, பிளாட் எண் 114/15, இரண்டாம் தளம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. கா. முகமது இப்ராஹிம்ஷா என்பவரின் 22.02.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 26.02.2024 அன்று பெறப்பட்டு 29/மா/2024 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

புதுக்கோட்டை, நிஜாம் காலனி, பிளாட் எண் 114/15, இரண்டாம் தளம் என்ற முகவரியில் வசிக்கும் திரு. கா. முகமது இப்ராஹிம்ஷா என்பவர் 22.02.2024 நாளிட்ட தனது மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்.

“புதுக்கோட்டை நகராட்சி நிர்வாகம் தொடர்பாக கடந்த 10.10.2023 மற்றும் 11.10.2023 ஆகிய தேதிகளில் நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்களுக்கு இரண்டு புகார் மனுக்கள் அளித்துள்ளேன். மேற்கண்ட எனது இரண்டு புகார் மனுக்களையும் பெற்றுக் கொண்ட நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்கள், மேற்கண்ட எனது இரண்டு புகார் மனுக்கள் மீதும் நான்கு மாதங்கள் கடந்தும் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

அரசு அலுவலகத்தில் அளிக்கப்படும் மனுக்கள் மீது மனுவினை மூன்று தினங்களுக்குள் மனு பெற்றுக்கொண்டமைக்கான ஒப்புகை வழங்க வேண்டும் என்றும் மேலும் பெற்றுக்கொண்ட புகார் மனு மீது 30 முதல் 60 தினங்களுக்குள் மனு மீதான நடவடிக்கை குறித்த இறுதி முடிவினை மனுதாரருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் தமிழ்நாடு அரசின் அரசாணை இருக்கும் நிலையில் தமிழ்நாடு அரசின் அலுவலராக இருக்கும் நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்கள் கடந்த 10-10-2023 மற்றும் 11-10-2023 ஆகிய தேதிகளில் என்னால் அளிக்கப்பட்ட புகார் மனு மீதான நடவடிக்கை குறித்த எந்த விவரமும் தெரிவிக்க மறுத்து வருகிறார். இதன் மூலம் தமிழ்நாடு அரசின் அரசாணை 99 மற்றும் 114 செயல்படுத்த மறுத்துள்ள புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்கள் மீது உரிய விசாரணை மேற்கொண்டு துறைரீதியிலான நடவடிக்கைக்கு உத்தரவிட வேண்டுமாய் மிகவும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

<u>10.10.2023 நாளிட்ட மனு:</u>

புதுக்கோட்டை டவுன் மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் அமைந்துள்ள எக்சென்டர் முட்டை கடை அமைந்திருக்கும் கட்டிடம் மிகப் பழமையான கட்டிடமாக உள்ளது.

மேற்கண்ட கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு குறித்த விவரம் நகராட்சி அலுவலகத்திலேயே இல்லை எனும் நிலையில், மேற்படி கட்டிடம் மிகப் பழைமையான கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு தொடர்பான விவரம் நூற்றாண்டுகள் கடந்து நிற்கும் நகராட்சி அலுவலகத்திலேயே இல்லை எனும் போது கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்த ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

மேலும், நகராட்சி நிர்வாகமே பொது மக்களின் நலன் கருதி மேற்கண்ட கட்டிடம் தொடர்பாக தாமாக முன்வந்து கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்து ஆய்வு செய்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஆய்வு செய்யப்பட்டதாக தெரியவில்லை.

பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள மிக முக்கிய பகுதியான மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு அதன் உறுதியில்லா தன்மையின் பொருட்டு இயற்கை சீற்றங்கள் மற்றும் அதிகப்படியான மழைக்காலங்களின் மேற்கண்ட மிகப்பழமையான கட்டிடமான டி எஸ். எண்: 3837 & 3838 எண்ணில் அமைந்துள்ள கட்டிடத்திற்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் மேற்கண்ட பகுதியில் வந்து செல்லும் பொதுமக்களுக்கு மிகுந்த பாதிப்பு ஏற்படுவதற்கான சூழல் உள்ளது.

ஆகவே, வருமுன் காப்போம் என்பது போல நகராட்சி நிர்வாகம் மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் அமைந்துள்ள கட்டிடத்தின் உறுதித் தன்மை மற்றும் மழைக் காலங்களில் மற்றும் இயற்கை சீற்றங்களில் கட்டிடத்தின் தாங்கும் திறன் ஆகிய குறித்து ஆய்வு செய்து பொதுமக்களின் நலன் காக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

<u>11.10.2023 நாளிட்ட மனு</u>

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட டவுன் கீழ் 2ம் வீதியில் டிஎஸ் எண் 4201ல் அமைந்துள்ள கட்டிடம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது. மேலும் மேற்படி கட்டிடம் நகராட்சியால் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதியை விட கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

இதுதொடர்பாக, தகவல் அறியும் உரிமைச் சட்டம் கீழ் நகராட்சி அலுவலகத்தில் தகவல் கோரி அளித்த மனுவிற்கு முறையான தகவல்கள் வழங்கப்படாத நிலையில் தகவல் கோரிய மனுதாரரான என்னிடமே தகவல் கோரும் வகையில் நகராட்சி நிர்வாகத்தால் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

ஆகவே, டவுன் கீழ் 2ம் வீதியில் அமைந்துள்ள டிஎஸ் எண் 4201ல் அமைந்துள்ள கட்டிடத்தினை மேலே தெரிவித்துள்ள எனக்கு தெரிய வரும் சங்கதிகள் சம்பந்தமாக உரிய வகையில் ஆய்வு செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரர் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு இம் முறைமன்ற நடுவ 22.07.2024 நாளிட்ட அறிவிப்பு மற்றும் 11.12.2024 நாளிட்ட கடிதம் மூலம் புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளர் தனது 28.01.2025 நாளிட்ட கடிதம் ந.க. எண் 9688/2023/எப்1–ல் கீழ்க்கண்டவாறு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

''<u>10.10.2023ம் தேதிய மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு</u>

மனுவில் குறிப்பிட்ட புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் எக் சென்டர் முட்டை கடை அமைந்துள்ள கட்டிடத்தின் உரிமையாளர் மற்றும் கடை நடத்தி வருபவருமாகிய இருவருக்கும் கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்த சான்று வழங்க கோரி கடந்த 28.10.2024 மற்றும் 07.01.2025 ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்த சான்று 22.01.2025ம் தேதியில் வழங்கப்பட்டுள்ளது.

<u>11.10.2023ம் தேதிய மனு மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கீழ்கண்டவாறு</u>

மனுவில் குறிப்பிட்ட புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ 2ம் வீதியில், நகரளவு எண் 4201–ல் அமைந்துள்ள தனியார் கட்டிடம் மாநகராட்சிக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ளதாக மனுவில் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து, 07.01.2025ம் தேதியில் நகர்சார் ஆய்வருக்கு மேற்படி இடத்தை அளவீடு செய்து அறிக்கை வழங்க கோரப்பட்டது. அதனை தொடர்ந்து 10.01.2025ம் தேதியில் நகர்சார் ஆய்வர் மேற்படி இடத்தை அளவீடு செய்ததில் பிளாக் எண் 55 நகரளவு எண் 4201/3–ல் தனியார் இடத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலை, கால்வாய் மற்றும் சந்து ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என நகர்சார் ஆய்வர் மூலம் அறிக்கை வழங்கப்பட்டுள்ளது. எனவே மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

மேலும் புகார் மனுக்கள் மீது மேற்கண்டவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதை அறிக்கையாக தங்களுக்கு பணிவுடன் அனுப்பி வைக்கப்படுகிறது.'' எனத் தெரிவித்துள்ளார்.

4. இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் ஆகியோரை தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.06.2025 அன்று நடைபெறும் விசாரணைக்கு நேரடியாக ஆஜராகுமாறு 13.06.2025 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

"புதுக்கோட்டை நகராட்சி நிர்வாகம் தொடர்பாக கடந்த 10.10.2023 மற்றும் 11.10.2023 ஆகிய தேதிகளில் நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்களுக்கு கீழ்க்கண்ட இரண்டு புகார் மனுக்கள் அளித்து நான்கு மாதங்கள் கடந்தும் எந்த ஒரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

**10.10.2023 நாளிட்ட மனு:**

புதுக்கோட்டை டவுன் மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் அமைந்துள்ள எக்சென்டர் முட்டை கடை அமைந்திருக்கும் கட்டிடம் மிகப் பழமையான கட்டிடமாக உள்ளது.

மேற்கண்ட கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு குறித்த விவரம் நகராட்சி அலுவலகத்தில் இல்லை. எனவே, மேற்படி கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள மிகப் பழமையான கட்டிடமாகும். இக்கட்டிடத்தின் உறுதித் தன்மை குறித்து ஆய்வு செய்யப்பட வேண்டியது அவசியமாகிறது.

எனவே, மேற்கண்ட பழமையான கட்டிடத்தின் உறுதித் தன்மை குறித்து புதுக்கோட்டை மாநகராட்சி உரிய ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

**11.10.2023 நாளிட்ட மனு**

புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட டவுன் கீழ் 2ம் வீதியில் டிஎஸ் எண் 4201ல் அமைந்துள்ள கட்டிடம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமித்தும், அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதியை விட கூடுதலாகவும் கட்டப்பட்டுள்ளதாக தெரிய வருகிறது.

ஆகவே, டவுன் கீழ் 2ம் வீதியில் அமைந்துள்ள டிஎஸ் எண் 4201ல் அமைந்துள்ள கட்டிடத்தினை புதுக்கோட்டை மாநகராட்சி அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்தை ஆய்வு செய்து உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்க உத்திரவிடுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்."

மேலும் 24.06.2025 அன்று சமர்ப்பித்துள்ள எழுத்துபூர்வ வாதுரையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"புதுக்கோட்டை நகராட்சி (தற்போது மாநகராட்சி) ஆணையர் திருமதி சியாமளா அவர்கள் மீது மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சென்னை அவர்களுக்கு கடந்த 22.02.2024 தேதியில் என்னால் அளிக்கப்பட்ட புகார் மனு சம்பந்தமாக மாண்புமிகு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ விசாரணை அழைப்பாணை கடிதம் முறையீட்டு மனு எண்.29/மா/2024 நாள் 13.06.2025 அடிப்படையில் இன்று 24.06.2025–ல் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் நடைபெறும் விசாரணையில் நேரில் முன்னிலையாகி எனது தரப்பில் தாக்கல் செய்யப்படும் எழுத்துரை வாக்குமூலம் என்னவென்றால்,

மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். வயது 65, புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட மேல 3 ம் வீதி மற்றும் தெற்கு 2 ம் வீதி சந்திப்பில் அமைந்துள்ள எக்சென்டர் முட்டை கடை அமைந்திருக்கும் கட்டிடம்

மிகப்பழமையான கட்டிடம் என்பதுடன் மேற்படி கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு குறித்த விவரம் நகராட்சி அலுவலகத்திலேயே இல்லை என்றும் மேலும் மேற்படி கட்டிடம் நூற்றாண்டுகள் கடந்து நிற்கும் கட்டிடம் அமைந்துள்ள இடத்தில் பொதுமக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள மிக முக்கியமான பகுதியில் உள்ள நிலையில் மேற்படி கட்டிடத்தின் உறுதித்தன்மை குறித்த ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்து கடந்த 10–10–2023ல் அன்றைய நகராட்சி ஆணையராக பணியில் இருந்த இந்த வழக்கின் எதிர்மனுதாரரான திருமதி சியாமளா அவர்களுக்கு பதிவஞ்சல் வழியாக புகார் மனு அளித்தேன்.

அதேபோல புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கீழ் 2 ம் வீதியில் டிஎஸ் எண் 4201 ல் அமைந்துள்ள கட்டிடம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ளதாக தெரியவருகிறது என்றும், மேற்படி கட்டிடம் நகராட்சி நிர்வாகத்தால் அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதியை விட கூடுதலாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளதாக தெரிவித்து உரிய ஆய்வு செய்து நடவடிக்கை வேண்டி கடந்த 11–10–2023 ல் அன்றைய நகராட்சி ஆணையருக்கும், இந்த வழக்கின் எதிர்மனுதாரருமான திருமதி சியாமளா அவர்களுக்கு பதிவஞ்சல் வழியாக புகார் மனு அளித்தேன்.

மேற்கண்ட இருபுகார் மனுக்கள் சம்பந்தமாக மீண்டும் நகராட்சி ஆணையரும், இந்த வழக்கின் எதிர்மனுதாரருமான திருமதி சியாமளா அவர்களை கடந்த 09–12–2023 ல் புதுக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் நேரில் சந்தித்து புகார் மனு அளித்தேன்.

மேற்கண்ட புகார் மனுக்கள் சம்பந்தமாக நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்கள் எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில், கடந்த 11–12–2023ல் மேற்கண்ட எனது புகார் மனுக்கள் மீது முறையான விசாரணை மேற்கொள்ளாத நிலை குறித்த விவரம் 7 தினங்களில் வழங்க கோரியும், மேற்படி உரிய தினங்களில் புகார் மனுக்கள் மீதான நடவடிக்கை விவரம் வழங்க மறுக்கும் நிலையில் தங்களுக்கு எதிராக மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் ஏன் புகார் மனு தாக்கல் செய்யக்கூடாது என குறிப்பிட்டு நகராட்சி ஆணையர், திருமதி சியாமளா அவர்களுக்கு ஒரு அறிவிப்பு கடிதம் என்னால் அளிக்கப்பட்டது. மேற்கண்ட தினங்கள் கொண்ட அறிவிப்பிற்கும் நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்கள் எந்தவொரு தகவலும் வழங்க மறுத்த நிலையில் 26.12.2023–ல் மீண்டும் புகார் மனுக்கள் மீது விசாரணை நடவடிக்கை வேண்டி திருமதி சியாமளா அவர்களுக்கு மனு அளிக்கப்பட்டது.

மேற்படி பல்வேறு தேதிகளில் அளிக்கப்பட்ட எனது புகார் மனுக்களை பெற்றுக் கொண்ட நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்கள் எந்த ஒரு புகார் மனு தொடர்பாகவும் விசாரணை மற்றும் நடவடிக்கை மேற்கொள்ளவில்லை.

இதன் மூலம் புதுக்கோட்டை நகராட்சி ஆணையராக இருந்த திருமதி சியாமளா அவர்கள், தனது அரசுப் பணி கடமையை செய்ய மறுத்துள்ளது உறுதியாவதுடன், நகராட்சி அலுவலகத்தில் அளிக்கப்பட்ட எனது புகார் மனுக்கள் மீது தமிழ்நாடு அரசின் அரசாணை 114–ன்படி உரிய காலத்தில் நடவடிக்கை மேற்கொள்ளாமல் தமிழ்நாடு அரசின் ஆணையை செயல்படுத்த மறுத்துள்ள தமிழ்நாடு அரசின் அலுவலரான, நகராட்சி ஆணையர் பணியில் இருந்த திருமதி சியாமளா அவர்கள் மீது உரிய விசாரணை மற்றும் நடவடிக்கை வேண்டி

மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் என்னால் புகார் மனு அளிக்கப்பட்டது.

ஆகவே, நகராட்சி இடம் ஆக்கிரமித்து கட்டுமானம், பொதுமக்களின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக விளங்கி வரும் பழமையான கட்டிடம் தொடர்பாக உரிய விசாரணை மற்றும் நடவடிக்கை வேண்டி அளிக்கப்பட்ட எனது புகார் மனுக்கள் மீது உரிய விசாரணை மற்றும் நடவடிக்கை மேற்கொள்ள மறுத்து தமிழ்நாடு அரசின் அரசாணையை செயல்படுத்த மறுத்துள்ள புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் திருமதி சியாமளா அவர்கள் மீது உரிய விசாரணை மற்றும் நடவடிக்கை வேண்டுவதுடன், மேற்படி கடந்த 10–10–2023 மற்றும் 11–10–2023 ல் புதுக்கோட்டை நகராட்சி (தற்போது மாநகராட்சி) அலுவலகத்திற்கு அளிக்கப்பட்ட எனது இரண்டு புகார் மனுக்கள் மீது முறையான விசாரணை மேற்கொள்ள தகுந்த ஆணையிட வேண்டுமாய் மிகவும் பணிவுடன் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.''

6. புதுக்கோட்டை மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

''**<u>10.10.2023ம் தேதிய மனு</u>**

மனுவில் குறிப்பிட்ட புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் எக் சென்டர் முட்டை கடை அமைந்துள்ள கட்டிடத்தின் உரிமையாளர் மற்றும் கடை நடத்தி வருபவர் ஆகிய இருவருக்கும் கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்த சான்று வழங்க கோரி கடந்த 28.10.2024 மற்றும் 07.01.2025 ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டது. அதனை தொடர்ந்து கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்த சான்று எக்சென்டர் கடை உரிமையாளர் மூலம் மாநகராட்சிக்கு 22.01.2025ம் தேதியில் அளிக்கப்பட்டது. இருப்பினும், கட்டிடத்தின் உரிமையாளரிடம் மேற்கண்ட கட்டிடம் குறித்த உறுதிச் சான்றினை தமிழ்நாடு பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்று வழங்குமாறு அறிவுறுத்தப்படும். மனுதாரரிடமிருந்து சான்றிதழ் பெற்ற பின் அது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**<u>11.10.2023ம் தேதிய மனு</u>**

மனுவில் குறிப்பிட்ட புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் 2ம் வீதியில், நகரளவு எண் 4201–ல் அமைந்துள்ள தனியார் கட்டிடத்தை 10.01.2025ம் தேதியில் நகர்சார் ஆய்வர் மேற்படி இடத்தை அளவீடு செய்ததில் பிளாக் எண் 55 நகரளவு எண் 4201/3ல் தனியார் இடத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலை, கால்வாய் மற்றும் சந்து ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என நகர்சார் ஆய்வர் தெரிவித்துள்ளார். எனவே மனுவில் குறிப்பிட்டுள்ளவாறு ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை.

எனினும், மனுதாரர் குறிப்பிட்டவாறு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து, கட்டிட உரிமையாளருக்கு உரிய தாக்கீது வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு இம்முறைமன்ற நடுவர் அவர்களுக்கு பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.''

7. இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக் என்பவர் சார்பாக திரு. எம். நந்தகோபால் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 24.06.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி, கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

“மனுதாரர் திரு. ரஜாக் இன்றைய விசாரணையில் நேரடியாக ஆஜராக இயலாத காரணத்தினால், அவர் சார்பாக திரு. ரஜாக் அவர்களுக்கு மேற்கண்டமுறையீட்டு மனு குறித்து விசாரணையில் ஆஜராக வேறொரு தேதி மற்றும் நேரம் ஒதுக்கீடு செய்யுமாறு மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.” என தெரிவித்துள்ளார்.

8. எனவே, இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக் என்பவரை மேற்கண்ட மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக 09.07.2025 அன்று நடைபெறும் தொடர் விசாரணைக்கு தமிழ்நாடு உள்ளாட்சிகள் அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் ஆஜராகுமாறு 04.07.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

9. எதிர்மனுதாரரான திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக் என்பவர் சார்பாக வழக்கறிஞர்கள் திருவாளர்கள் B. பாலாஜி மற்றும் எம். நந்தகோபால் ஆகியோர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 09.07.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி, கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“We, B. Balaji and M. Nandagopal, Advocates appearing for Dr.Razak of Pudukottai in Case No.29/C/2024 which we have attended the hearing today (09.07.2025) in connection with the petition filed by Thiru Mohammed Ibrahim Shah (Case No.29/C/2024) of Pudukottai before the Tamil Nadu Local Bodies Ombudsman, Guindy, Chennai-600 032.

Since this Respondent has not received the petition copy or relevant document connected to the above Case No.29/C/2024 from the Office of the Tamil Nadu Local Bodies Ombudsman and only received summon copy of the relevant case, the petitioner has also not furnished any notice or petition copy to the Respondent. So the Respondent does not know any details of the case. As per the instructions of the Hon’ble Tamil Nadu Local Bodies Ombudsman, now we have received the copy of the petition along with the enclosures and we also request to give another date for enquiry.”

10. திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக் என்பவரை மேற்கண்ட மனுதாரரின் முறையீட்டு மனு சம்பந்தமாக 05.08.2025 அன்று நடைபெறும் தொடர் விசாரணைக்கு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் ஆஜராகுமாறு 18.07.2025 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது.

11. இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக் மற்றும் வழக்கறிஞர் திரு. பு. சதீஸ்குமார் ஆகியோர் 05.08.2025 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி, கீழ்க்கண்டவாறு தங்களது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளனர்.

“எம். ஹாஜி அப்துல் ரசாக் ஆகிய எனக்கு சொந்தமான புதுக்கோட்டை மீன்மார்க்கெட், மேல 3வது வீதி, கதவு எண் 38/38ல் எக்ஸ் சென்டர் பிராய்லர்ஸ் கடை என்ற பெயரில் கடந்த 25 வருடங்களாக மேலாக வாடகைக்கு திரு. நிசாம் அவர்களுக்கு விடப்பட்டு திரு. நிசாம் அவர்கள் தற்போது வரை எக்ஸ் சென்டர் நடத்தி வருகிறார். இந்த சொத்தானது எனக்கு பூர்வீக அடிப்படையில் கிடைக்கப் பெற்றதாகும்.

இக்கட்டிடம் பலவீனமாக உள்ளதாகவும், அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டு உள்ளதாகவும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட நிலையில் SSM ENGINEERING ASSOCIATES, No.641, PERIYAR NAGAR, RAJAGOPALAPURAM, PUDUKOTTAI-622003 என்ற முகவரியில் அமைந்துள்ள, அரசு உரிமம் பெற்ற திரு. Er. S. RAJENDRAN என்பவர் BUILDING STABILITY CERTIFICATE வழங்கியுள்ளார். மேலும் மேற்கண்ட கட்டிடத்திற்கு உரிய கட்டிட உறுதி சான்றிதழினை தமிழ்நாடு பொதுப் பணித் துறை மூலம் பெற்று சமர்ப்பிக்கப்படும். மேலும் முறையீட்டு மனு எண் 29/மா/2024 நாள் 13.06.2025 அன்றைய மனுவுக்கு எழுத்துபூர்வமான எதிர்வாதுரையுடன்கூடிய உரிய ஆவணங்களை இத்துடன் சமர்ப்பிக்கிறோம்.” என தெரிவித்துள்ளனர்.

05.08.2025 அன்று இரண்டாம் எதிர்மனுதாரரான திரு. டாக்டர் அப்துல் ரஜாக் என்பவர் சமர்ப்பித்துள்ள எழுத்துபூர்வ எதிருரையில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

“1. மேற்படி முறையீட்டு மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு பொய், பிரட்டு, மோசடி, சட்டப்படியோ, நியாயப்படியோ அல்லது உண்மை நிலவரப்படியோ செல்லத்தக்கதல்ல. இந்த எதிருரையில் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ள சங்கதிகள் தவிர முறையீட்டு மனுவில் கூறப்பட்டுள்ள யாவற்று சங்கதிகளையும், பொய், பிரட்டு, மோசடி என இந்த எதிர்மனுதாரர் திட்டவட்டமாக மறுக்கிறார். அவையாவற்றையும் கண்டிப்பாக நிரூபிக்க வேண்டிய கடமையும் கடப்பாடும் இந்த மனுதாரரையே சார்ந்ததாகும்.

2. இந்த முறையீட்டு மனுவில் கூறப்பட்டுள்ள சொத்திற்கும் இந்த முறையீட்டு மனுதாரருக்கும் யாதொரு சம்பந்தமும் கிடையாது. அத்துடன் மேற்படி மனுவில் கூறப்பட்டுள்ள சொத்துக்கு பக்கத்திலேயோ, எதிரிலேயோ, அல்லது அந்த பகுதியிலேயோ இந்த முறையீட்டு மனுதாருக்கு சொந்தமான யாதொரு சொத்தும் கிடையாது. இந்த முறையீட்டு மனுதாரர் கூறுவதுபோல் மனு கட்டிடம் மிகவும் பழுதடைந்த நிலையில் இடிந்து விழும் அபாயத்துடன் இருந்து வந்தால் அந்த கட்டிடத்திற்கு அருகில் உள்ள எந்தவொருவரும் மனுச் செய்திருப்பார்கள். ஆனால் அவ்வாறு யாரெவரும் எவ்வித மனுவும் தாக்கல் செய்யாததிலிருந்தே வீண் விரோதம் காரணமாக பிரட்டான இந்த மனுவை இந்த முறையீட்டு மனுதாரர் தாக்கல் செய்திருக்கிறார் என்பதும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெரிய வரும். இந்த மனுவும் இந்த எதிர்மனுதாரருக்கு தேவையில்லாத காலவிரையம், பண விரையம், மனக்கிலேசம், உடல் உபாதைகள் கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடனேயே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த முறையீட்டு மனுதாரர் மனுச்சொத்தில் அனுபவ சுவாதீனத்திலும் இல்லை. மேற்படி மனுச்சொத்தும் பன்னெடுங்காலங்களுக்கு முன்னர் பழைய முறைப்படி மிகவும் நேர்த்தியாக கட்டப்பட்டுள்ள மதராஸ் தார்சு கட்டிடமாகும். மேற்படி மனுவில் கண்டுள்ள சொத்தில் அமைந்துள்ள தார்சு கட்டிடமும் இன்னும்

பலகாலம் மிகவும் பலமாகவும்,, நேர்த்தியாகவும் இருக்க அதிகமாக வாய்ப்பு உள்ளது. அந்த சொந்தில் வாடகைதாரர் அவரது பொறுப்பிலேயே கோழிக்கடை நடத்தி வருகிறார். அதுமட்டுமல்லாமல் இந்த முறையீட்டு மனுதாரர் இந்த எதிர்மனுதாரருக்கும், அவரது தாய், சகோதரர்கள், மனைவிக்குச் சொந்தமான புதுக்கோட்டை டவுன் கீழராஜ வீதி மேல் சாகில் நகரப்புல எண் 3934–ல் உள்ள பழுதடைந்த இடிந்து விழும் நிலையில் இருந்து வந்த மூன்று தளம் கொண்ட கட்டிடத்தின் தரை தளத்தில் கிழக்கு பார்க்க உள்ள இரண்டு கடைகளில் வடக்கு பகுதியில் இருந்த வந்த கடையில் வாடகைதாரராக இருந்து வந்தார். மேற்படி கடைக் கட்டிடமும் பழுதடைந்து இடிந்து விழுந்து விடும் நிலையில் இருந்ததால் இந்த முறையீட்டு மனுதாரரை காலி செய்வதற்காக இந்த எதிர்மனுதாரரின் தாயார் பரீசாபேகம்–1, இந்த எதிர்மனுதாரர் ஹாஜி அப்துல் ரசாக்–2, சகோதரர்கள் ஹாஜி அப்துல் காதர்–3, ஹாஜி அப்துல் வஹாப்–4, ஹாஜி சையது முகமது–5, சகோதரி ரோஜாம்மாள்–6 மற்றும் மனைவி ஷைரா–7 ஆக ஏழு நபர்களும் மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் R.C.O.P. No.12/2018 தாக்கல் செய்தனர். அந்த மனுவில் கடந்த 24.09.2019–ம் தேதி அந்த மனுக்கட்டிடத்தை இந்த முறையீட்டு மனுதாரர் காலி செய்து கொடுக்க வேண்டும் என்று கடந்த 24.09.2019–ம் தேதி உத்தரவானது. அந்த உத்திரவின் போட்டோ நகலும் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. அந்த உத்திரவிற்குப் பின்னரும் இந்த முறையீட்டு மனுதாரர் அந்த மனுக் கட்டிடத்தை காலி செய்து இந்த எதிர்மனுதாரர் குடும்பத்தினர்களிடம் சுவாதீனம் ஒப்படைக்காமல் இருந்து வந்தார். அதனால் இந்த எதிர்மனுதாரர் குடும்பத்தினர்கள் இந்த முறையீட்டு மனுதாரருக்கு எதிராக மாண்பமை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், புதுக்கோட்டையில் நிறைவேற்று மனு எண் E.P.7/2021 தாக்கல் செய்தனர். அந்த நிறைவேற்று மனுவிலும் இந்த முறையீட்டு மனுதாரர் காலி செய்து கொடுக்காமல் காலம் கடத்தி வந்தார். அதற்குப்பின்னர் பெய்த பெருமழையில் அந்த மனுக் கட்டிடம் தாமாக இடிந்து விழுந்து விட்டது. அதனால் இந்த முறையீட்டு மனுதாரர் அவரது கடையில் இருந்த அனைத்து சாமான்களையும் எடுத்துக் கொண்டு காலியிடமாக விட்டு விட்டு ஏதோ இந்த எதிர்மனுதாரர் அந்த மனுக் கட்டிடத்தை வேண்டுமென்றே இடித்து தள்ளிவிட்டதாகக் கூறி மேற்படி நீதிமன்றத்தில் மனு E.A No.19/2023 தாக்கல் செய்தார். அதற்குப் பின்னர் தாமாக இடிந்து விழுந்து விட்டதில் மேற்படி மனுச் சொத்தின் சுவாதீனத்தை இந்த எதிர்மனுதாரர் குடும்பத்தினர்கள் பெற்றுக் கொண்டு கடந்த 18.07.2023–ம் தேதி அந்த நிறைவேற்று மனுவும் முடிக்கப்பட்டு உத்திரவிடப்பட்டது. அதனால் வீண் விரோதம் பாராட்டிக் கொண்டு இந்த முறையீட்டு மனுதாரர் இந்த எதிர்மனுதாரர் மற்றும் குடும்பத்தினர்களுக்கு விரோதமாக ஏதாவது விதத்தில் இடைஞ்சல் கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடனேயே இருந்து வருகிறார். அந்த வகையில் இந்த முறையீட்டு மனுதாரருக்கும் இந்த எதிர்மனுதாரருக்கும் பகைமை இருந்து வருகிறது. மேற்படி நீதிமன்ற நடவடிக்கை சம்பந்தப்பட்ட உத்திரவு நகலும் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. அதிகமான பணம் பெற்றுவிடலாம் என்ற எண்ணத்தில் இருந்து வந்த இந்த முறையீட்டு மனுதாரர் கெட்ட எண்ணம் நிறைவேறாமல் போய் விட்டதால் இதுபோன்ற விதத்தில் நல்ல நிலையில் உள்ள கட்டிடம் சீர்குலைந்து போய் இடிந்து விழுந்து விடும் நிலையில் உள்ளது என்று கூறி இந்த பிரட்டான மனுவை தாக்கல் செய்துள்ளார். இந்த எதிர்மனுதாரருக்குச் சொந்தமான இந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தில் உள்ள கட்டிடம் நல்ல ஸ்திரத்துடன் இருந்து

வருகிறது என்பது பற்றி உரிய பொறியாளர் அவர்கள் சான்றிதழ் வழங்கியுள்ளார். அந்த Building Stability Certificate–ம், புதுக்கோட்டை மாவட்ட கேசட் பப்ளிகேசனும் இத்துடன் தாக்கல் செய்யப்படுகிறது. அந்த அசல் சான்றிதழும் 1–ம் எதிர்மனுதாரர் ஆன புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு அவர்களும் இந்த மனுக் கட்டிடத்தை பார்வையிட்டுச் சென்றுள்ளனர்.

3. இந்த மனுவில் எள்ளளவும் நல்லெண்ணம் கிடையாது. அத்துடன் இந்த முறையீட்டு மனுவில் மனுதாரர் சமூகம் அலுவலகத்தில் ஆஜராகாமல் இருந்து கொண்டு வீண் விரோதம் பாராட்டிக் கொண்டு இங்கு 1–ம் எதிர்மனுதாரர் அவர்களிடமும் தேவையில்லாமல் வம்புகள் செய்து கொண்டு எப்படியாவது தேவையில்லாத உலைச்சல் கொடுக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்துடனேயே இருந்து வருகிறார். நல்லநிலையில் உள்ள கட்டிடத்தை இடிக்க வேண்டும் என்று எவ்வித சம்பந்தமும் இல்லாத இந்த முறையீட்டு மனுதாரர் கூறுவதும் எந்த வகையிலும் ஏற்புடையதல்ல.

ஆகையால் சமூகம் அருள்கூர்ந்து இந்த முறையீட்டு மனுதாரரின் பிரட்டான இந்த மனுவை இந்த எதிர்மனுதாரரின் அதிகப்படியான இழப்பீட்டு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து தக்க உத்திரவாகவேணுமாய் மெத்த பணிவுடன் பிரார்த்திக்கப்படுகிறது.''

<u>உறுதிமொழி</u>

மேலே கண்ட சங்கதிகள் யாவும் உண்மையென்றும், எனக்கு நேரில் தெரியும் என்றும் உறுதியாகச் சொல்லி சென்னையிலிருந்து 05.08.2025–ம் தேதி கையெழுத்து செய்தேன்.'' என தெரிவித்துள்ளார்.

12. மனுதாரரின் மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரர்கள் புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலம் மற்றும் திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக் அவர்களின் எதிருரை, திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக், வழக்கறிஞர் திரு.பு.சதீஸ்குமார் இருவரும் சேர்ந்து அளித்த வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன.

புதுக்கோட்டை டவுன் மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் அமைந்துள்ள எக்சென்டர் முட்டை கடை அமைந்திருக்கும் கட்டிடம் 100 ஆண்டுகளுக்கு மேலாக உள்ள மிகப் பழமையான கட்டிடம் என்பதும், மேற்கண்ட பழமையான கட்டிடத்தின் உறுதித் தன்மை குறித்து புதுக்கோட்டை மாநகராட்சி உரிய ஆய்வு மேற்கொள்ள வேண்டும் என்பதும், புதுக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட டவுன் கீழ் 2ம் வீதியில் டிஎஸ் எண் 4201ல் அமைந்துள்ள கட்டிடம் நகராட்சிக்கு சொந்தமான இடத்தினை ஆக்கிரமித்து, அனுமதிக்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதிக்கு மாறாக கட்டப்பட்ட கட்டிடத்தை ஆய்வு செய்து உரிய சட்டபூர்வ நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளதும் மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் எக் சென்டர் முட்டை கடை அமைந்துள்ள கட்டிடத்தின் உரிமையாளர் மற்றும் கடை நடத்தி வருபவர் ஆகிய இருவருக்கும் கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்த சான்று வழங்க கோரி கடந்த 28.10.2024 மற்றும் 07.01.2025 ஆகிய தேதிகளில் அறிவிப்பு கடிதம் வழங்கப்பட்டதும், எக்சென்டர் கடை உரிமையாளர் கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்த சான்று மாநகராட்சிக்கு 22.01.2025ம் தேதியில் அளிக்கப்பட்டது என்பதும், இருப்பினும்,

கட்டிடத்தின் உரிமையாளரிடம் மேற்கண்ட கட்டிடம் குறித்த உறுதிச் சான்றினை தமிழ்நாடு பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்று வழங்குமாறு அறிவுறுத்தப்படும் என்பதும், அச்சான்றிதழ் பெற்ற பின் இது குறித்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதும், மற்றும் புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் 2ம் வீதியில், நகரளவு எண் 4201–ல் அமைந்துள்ள தனியார் கட்டிடத்தை 10.01.2025ம் தேதியில் நகர்சார் ஆய்வர் மேற்படி இடத்தை அளவீடு செய்ததில் பிளாக் எண் 55 நகரளவு எண் 4201/3ல் தனியார் இடத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலை, கால்வாய் மற்றும் சந்து ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என நகர்சார் ஆய்வர் தெரிவித்துள்ளார் என்பதும், எனினும், மனுதாரர் குறிப்பிட்டவாறு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து, கட்டிட உரிமையாளருக்கு உரிய தாக்கீது வழங்கப்பட்டு, அதன் அடிப்படையில் உரிய மேல்நடவடிக்கை எடுக்கப்படும் என்பதும் புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளரின்அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் வாயிலாக அறிய முடிகிறது.

பூர்வீக அடிப்படையில் கிடைக்கப்பெற்ற சொந்தமான புதுக்கோட்டை மீன்மார்க்கெட், மேல 3வது வீதி, கதவு எண் 38/38ல் உள்ள கட்டிடத்தில் எக்ஸ் சென்டர் பிராய்லர்ஸ் கடை என்ற பெயரில் கடந்த 25 வருடங்களாக மேலாக வாடகைக்கு திரு. நிசாம் அவர்களுக்கு விடப்பட்டு, தற்போது வரை அவர் மேற்கண்ட எக்ஸ் சென்டர் நடத்தி வருகிறார் என்பதும், இக்கட்டிடம் பலவீனமாக உள்ளதாகவும், அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டு உள்ளதாகவும், மனுதாரரால் தெரிவிக்கப்பட்ட நிலையில் SSM ENGINEERING ASSOCIATES, No.641, PERIYAR NAGAR, RAJAGOPALAPURAM, PUDUKOTTAI-622003 என்ற முகவரியில் அமைந்துள்ள, அரசு உரிமம் பெற்ற பொறியாளர் திரு.S.RAJENDRAN என்பவர் BUILDING STABILITY CERTIFICATE வழங்கியுள்ளார் என்பதும், மேற்கண்ட கட்டிடத்திற்கு உரிய கட்டிட உறுதி சான்றிதழினை தமிழ்நாடு பொதுப் பணித் துறை மூலம் பெற்று சமர்ப்பிக்கப்படும் என்பதும் இரண்டாம் எதிர்மனுதாரரான எம். ஹாஜி அப்துல் ரசாக் என்பவரின் வாக்குமூலம் வாயிலாக அறியமுடிகிறது.

இந்நேர்வில், புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட மேல 3ம் வீதி மற்றும் தெற்கு 2ம் வீதி சந்திப்பில் எக் சென்டர் முட்டை கடை அமைந்துள்ள கட்டிடத்தின் உரிமையாளர் மற்றும் கடை நடத்தி வருபவர் ஆகிய இருவருக்கும் கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து சான்று வழங்க கோரி புதுக்கோட்டை மாநகராட்சியால் அறிவிப்பு கடிதங்கள் வழங்கப்பட்டதின் அடிப்படையில், கட்டிட உரிமையாளர் கட்டிடத்தின் உறுதி தன்மை குறித்து SSM ENGINEERING ASSOCIATES, No.641, PERIYAR NAGAR, RAJAGOPALAPURAM, PUDUKOTTAI-622003 என்ற முகவரியில் அமைந்துள்ள, அரசு உரிமம் பெற்ற பொறியாளர் திரு.S.RAJENDRAN என்பவர் வழங்கிய BUILDING STABILITY CERTIFICATEஐ புதுக்கோட்டை மாநகராட்சிக்கு அளித்திருந்தாலும், இரண்டாம் எதிர்மனுதாரர் எம். ஹாஜி அப்துல் ரசாக் என்பவர் தன்னுடைய வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, கட்டிடம் குறித்த உறுதிச் சான்றினை தமிழ்நாடு பொதுப்பணித் துறையிடமிருந்து பெற்று, மாநகராட்சிக்கு சமர்ப்பிக்க அறிவுறுத்தப்படுகிறது. நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு, அக்கட்டிடத்தின் உறுதி தன்மையை உறுதி செய்து அதனடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளருக்கு இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், புதுக்கோட்டை மாநகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ் 2ம் வீதியில், நகரளவு எண் 4201–ல் அமைந்துள்ள தனியார் கட்டிடத்தை அளவீடு செய்ததில் பிளாக் எண் 55 நகரளவு எண் 4201/3ல் தனியார் இடத்திற்கு அருகில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான சாலை, கால்வாய் மற்றும் சந்து ஆகியவற்றில் ஆக்கிரமிப்புகள் ஏதும் இல்லை என நகர்சார் ஆய்வர் தெரிவித்திருந்தாலும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளவாறு கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடங்கள் குறித்து,

கட்டிட உரிமையாளருக்கு உரிய தாக்கீது வழங்கி அதனடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என புதுக்கோட்டை மாநகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளவாறு புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையர் இது தொடர்பாக மேல்நடவடிக்கை மேற்கொள்ளவும் பரிந்துரை செய்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 07–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

(1) திரு. கா. முகமது இப்ராஹிம்ஷா,
த/பெ காதர் மொய்தீன்,
பிளாட் எண் 114/15, இரண்டாம் தளம்,
நிஜாம் காலனி, புதுக்கோட்டை–622 001.

(2) ஆணையாளர்,
புதுக்கோட்டை மாநகராட்சி, புதுக்கோட்டை–622 001.

(3) திரு. எம். ஹாஜி அப்துல் ரசாக்,
கதவு எண் 1538/2, மேல 4ம் வீதி, புதுக்கோட்டை.

(4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

(5) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer),
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண் 75 சாந்தோம் நெஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை 600 028.

<u>நகல்</u>
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ / உதிரிகள்.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

10/10/25
செயலாளர்.

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம் சென்னை–600 032